| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 27.11.2025 | |
| STC.No.1069/2023 | |
| சாட்சி : DW1 | |
| பெயர் : திரு. ரவிகாந் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. லட்சுமணன் | தொழில் : Canara Manager |
| கிராமம் : மணப்பாறை | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 55/2025 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

-------------------------------------------------------------

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது மணப்பாறை கிளை, கனரா வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பணை பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வந்த அழைப்பாணையில் எந்த அக்கவுண்ட் சம்மந்தப்பட்ட கணக்கு கொண்டு வரவேண்டுமென்று கணக்கு எண்.4794101011999 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கணக்கு ஜாயின்ட் அக்கவுண்ட் ஆகும். 1. ராஜரெத்தினம் த/பெ. பரசுராமன், 2. சசிகலா க/பெ ராஜரெத்தினம். 01.01.2022 முதல் 31.12.2022 வரை ஸ்டேட்மண்ட் கொண்டுவந்துள்ளேன். வங்கி பரிவர்த்தனையில் G– pay யில் பணம் அனுப்பியிருந்தால் அனுப்பிய நபரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். 24.05.2022, 16.06.2022, 10.07.2022, 30.07.2022, 13.08.2022, 01.09.2022, 04.10.2022, 07.11.2022, 29.11.2022, 20.12.2022, 05.01.2023, 28.01.2023, 16.02.2023, 27.02.2023, 23.03.2023, 19.04.2023, 29.05.2023 ஆகிய தேதிகளில் எதிரி நாகராஜன் என்பவரின் UPI மூலமாக நான் கொண்டுவந்துள்ள வங்கி கணக்கிற்கு பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது. **வங்கி பரிவர்த்தனைகள் எ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**2.** நான் கொடுத்துள்ள ஸ்டேட்மண்டில் நாகராஜ் என்பவரின் விபரங்கள் உள்ளதா என்றால் 2022 ம் ஆண்டிற்கான ஸ்டேட்மண்ட் தான் கொடுத்துள்ளேள். வழக்கு காசோலை 08.08.2023 ம் தேதி என்பதால் வழக்கு காசோலை திருப்பட்டதற்கான விபரம் தாக்கல் செய்துள்ள ஸ்டேட்மண்டில்

இல்லை. UPI Transaction பண்ணியுள்ள காலத்திற்கும், வழக்கு காசோலை தாக்கல் செய்து திருப்பட்ட காலத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். எதிரி நாகராஜன் என்பவருக்கும், புகார்தாரர் ராஜரெத்தினம் என்பவருக்கும் நான் தாக்கல் செய்துள்ள ஸ்டேட்மண்ட் மூலம் பணப்பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது உண்மைதான் என்றால் சரிதான். வழக்கு காசோலைக்கும் தற்போது தாக்கல் செய்யப்படும் UPI Transaction க்கும் யாதொரு சம்மந்தமில்லை என்றால் சரிதான்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.